இன்னுயிர் செய்த தீமை யெழும்புறு முடலை வாட்ட
மின்னிய கன்மந் தீர்க்கும் வகைபெறு முறைமை தானும்
முன்னுறு வியாதி தீர்க்கு மருந்துசெய் முறைமை தானும்
துன்னிய பாயி ரத்தைச் சுருக்கமாய் முனிவர் சொன்னார். ()

என்றிவை பற்பல வியாதி பேதமாய்
நின்றவை தீர்வது நிலைத்துக் கொல்வதும்
அன்றியு மாயுரு வேதஞ் சொன்னதில்
துன்றிடு தானமுந் தொகையுஞ் சொல்லுவாம். (உஅ)

## நோய்களின் தொகையும் அவை நிற்குமிடங்களும்.

பொற்புறு கைலை மீதிற் பொலிவுறு மமல மூர்த்தி
அற்புத சத்திக் கன்னா ளறைந்திடு மாயுள் வேதம்
சொற்புறு வியாதி நிற்குந் தொகைவகை கணக்குத் தானம்
நிற்புறத் தமிழா லியானு மறிந்தவா நிகழ்த்த லுற்றாம். (உகூ)

திருமலி சிரத்தைஞ் ஞூறு சேர்ந்திடுங் காதி னூறு
கருமலி நயன மீதிற் கதித்திடுந் தொண்ணூற் றாறும்
உருமலி பிடரின் மூக்கி னுற்றநோ யறுப தாகும்
தருமலி தோளின் முப்பான் றரித்திடு நாடி முப்பான். (௩௦)

நாடிசேர் வாயி னூறு நாக்கினின் முப்ப தாகும்
கூடிய பல்லின் முப்பான் குறித்திடிற் கண்ட நூறு
நீடிய புயத்திற் பத்து நிலைத்திடு மார்பைஞ் ஞூறு
மூடிய முலையின் முப்பான் முதிர்ந்திடு கையி னூறே. (௩௧)

ஏய்ந்திடு வயிறைஞ் ஞூறே யேதமில் விலாவின் முப்பான்
ஆய்ந்திடு முதுகி னைஞ்ஞூ றரையைஞ் ஞூற்றிரண் டதாகும்
ஓர்ந்திடு யோனி யைம்பா னுற்றகோ சத்தின் முப்பான்
சார்ந்திடு பீச முப்பான் சந்தினின் முப்பத் தொன்றே. (௩௨)

ஒன்றிய மூலத் தைம்பா னேறிய துடையின் முப்பான்
நின்றிடுங் காயிக் கீழ நிலைத்திடும் வியாதி யைம்பான்
சென்றிடு முழங்கான முப்பான் சேர்ந்திடுங் கன்ன மைம்பான்
துன்றிடுங் கரத்திற் பத்துக் காலடி பதினைந் தாமே. (௩௩)

வேறேயாவின் பால்குறுணிமிகுநல்லெண்ணெய்குறுணிவிட்டே
ஊறிக் கலந்து காயும்போ துடனே கற்க முறைப்பக் கேள்
கூறு மிலாமிச் சிறுவேலி கொடிகன் னாரி சதாவேரி
நாறு முத்தங் கமலவேர் நற்செங் கழுநீர்க் கிழங்கதின்பூ. ( )

பூவே சந்தங் காரகிலும் பொன்னே யேல மிலவங்கம்
காவே பொருந்துஞ் செண்ப கப்பூக் கர்ப்பூரம்புனுகுசட்டமதும்
கோவே பச்சிலை நாகம்பூக் கூறு மிருகச் சோலமுடன்
தாவே தக்கோ லப்புட்டில் சாதிக் காயொடு கோட்டமுமே; ()

மூந்து மதுரஞ் சாளமுடன் மூரி நாணற் றூததுவும்
மந்தம் போக்கும *தாவரிசி மாஞ்சி றகர முந்திரிகை
கெந்தத் தேவ தாரமொடு கிளர்சத குப்பை நறும்பிசினும்
அந்தப்புனத் துக்கண்டில் வெண்ணெயஞ்சனக்கல்லுச்சயிலேகம்.

கடுகு ரோகிணி திப்பிலியுங் கருதுங் குங்கும மிருப்பைப்பூ
வடுவே யனைய கண்மடவீர் மருந்தோ ரொன்று கழஞ் சிரண்டு
கொடுவா விளநீ ரிலிலரைத்துக் கூறு மெண்ணெ யதிற்கரைத்து
முறுகா தெரித்துப் பதத்தில் வடி முழுகாய் பித்த முடுகாதே.

## 6 பொன்னாங்காணிநெய்

பொன்னாங் காணி சிறுகீரை புடோலே யிளநீர் பூசினிக்காய்
கன்னல் பொன்னா வாரைப்பூக் கங்கைமீட்டான் வெள்ளரிப்பூ
நன்னார் சீந்தில் பற்படக நற்கம் பளிக்கொண் டான்பீர்க்குப்
பொன்னார்மலர்த்தாழையின்விழுதுபூச்சர்க்கரையேபுளியாரல்.

இவையோ ரொன்று நாழிசா றிளநீர் நெய்பால் சரிகூட்டிச்
சுவைசேர் நெல்லிக் காய்ச்சாறு சொலுமாதளையின் பழச்சாற்றோ
டவையே விட்டுத் திரிகடுகு பலைமூன் றதுவு மதிமதுரம்
கவைசேர் கமலப் பூவல்லி வளைய மதன்கா யிருவேலி. (௫௪)

சீனி செங்கழு நீர்க்கோட்டந் தேவ தார மகிழப்பூ
வானீ ரருத்துந் தேற்றாவும் வளர்செண் பகப்பூ நாகம்பூ
ஊனே யுறுகோ ரோசனையு முறுநற் பச்சைக் கர்ப்பூரம்
காணார் கூகை நீறுடனே மருந்தோ ரொன்று கழஞ்சிரண்டே.

---

* அதாவரிசி - பெருஞ்சீரகம். பூச்சர்க்கரை - பூமிசர்க்கரைக்கிழங்கு.

## சிகிச்சை

### 1. குடிநீர்

ஏலுங் குணத்தை மிகவறிந்தா லிந்நோய் தீர மருந்துரைப்பன்
மேலுந் திப்பிலி வெள்ளருள்ளி வெண்குந் திருக்கங் கடுதான்றி
சாலும் பேய்ப்பு டோல்வேப்பலகு சாறடைவேரொன்றிருகழஞ்சு
காலம் பெறவே யெட்டொன்றாய்க் காய்ச்சிக் குடிக்க வல்லீரே.

### 2. ஆடாதோடைக்கிருதம்

ஆடாதோடை தூதுவளை யரிய பிரமி சிறுவழுதில்
வாடாத் துளசி குமரிபுடோல் வல்லி தொய்யில் சிந்தில் ?வள்ளி
தூடாம் வல்ல முல்லைமலை தாங்கி கற்றா ழஞ்சருகு [சே.
போடாதொன்றுபலம்பத்துப் பொருந்தவெட்டொன்றாய்க்காய்ச்

சேருங் குடிநீர் வடிகொண்டு திரிபலை யரத்தை கொத்தமல்லி
பாருங் கடுகு வெட்பாலை பாரங்கி கச்சோலந் திரிகடுகு
கூருஞ் சிவதை யுடன்வசம்பு கோட்டம் ரோசனை செண்பகப்பூத்
தாரு மேதை கண்டில் வெண்ணெய் தாளிசபத்திரி முந்திரிகை.

முந்து கடுரோ கணிசீனி யிவையோ ரொன்று முக்கழஞ்சு
வெந்த கஷாயத் துடனரைத்து வேறு மிளநீர் பானெய்யும்
தெர்ந்தமாகப்பதத்தில்வடி சொல்லுமரைமண்டலங்கொண்டால்
வந்த பயித்ய சேத்மமெலா மானே தீரும் வண்மையிதே. ()

### 3. திரிபலைத் தைலம்

ஒத்த திரிபலை யைம்ப தின்பல முள்ளில் விரையது தள்ளியே
சுத்த மானச லத்தி லேயிரு தூணி யதுவிடு வெந்தபின்
பத்தி யாயிரு நாழி நீர்வடி பாக மேயுறு கற்கமும்
துத்த நாற்படி யெண்ணெ யும்மிள நீரு நாற்படி சொல்லவே.

சொல்லு செங்கழு நீர்க்கி ழங்கொடு துய்ய சீரக மேலமும்
நல்ல திப்பிலி மூலம் ரோசினை *நாக கேசர நாகணம்

---

?வள்ளி - நீர்வள்ளி, *நாககேசரம் - சிறுநாகப்பூ.

சிவகங் கோட்டங் கன்னூர் திப்பிலி மூல மாஞ்சில்
தேவர்க் டாரு வத்தித் திப்பிலி நாகங் கெந்தி
மேவ்வெண் காரங் காந்த மிடவகங் கடுக்காய் தேறு
பாவுமுப் பலையே சந்தம் பற்றிடு கழஞ்சொவ் வொன்றே. (௬௪)

ஒன்றித்தே யரைத்துக் காய்ச்சி யுள்ளினாற் பதுநாட் கொள்ளக்
கன்றிய கபால பித்தக் கடுப்பெலா மோடு மென்றே
அன்றர னுமையாட் கோது மாயுண்மா மறையே கூறும்
நன்றியை யுணர்ந்த வேத நான்முகன் முனிவர்க் கோதும். ( )

சாத்தியம் ஆறும் முற்றிற்று.

---

## இனி அசாத்தியம் நாலில்

### க. கபால பாரிச வாயுவின் குணம்

ஓதிய கபாலந் தன்னி லோர்புறந் திமிர்த்து வேர்க்கும்
வேதனை வரவே குத்தும் விழியிடை புருவத் துள்ளும்
ஊதையுண் டாகு நாளு மொடுவிழுஞ் செவியிற் புண்ணும்
தீதுடன் றலைவ ரண்டு பிடரிநோக் தீரா தன்றே. (௮௬)

### இரட்சை

ஏய மருந்திற் றீராதா லேழை மனித ரேகேண்மின் [டதனில்
தூய விரட்சைக் கருவிமுன்னோர் சொல்லுந் தொண்ணூற் றெட்
ஆயுஞ் சிரபா ரிசவாய்வுக் கமைத்த சூலக் காலதனால்
தீயு மறிவு செய்வைபிடர் நெருங்கும் புருவ நடுவிலுமே. (௮௭)

### சிகிச்சை

புண்ணழ றீர மாற்றிப் பொங்கவே மஞ்சட் காரம்
அண்ணலாருரைத்தவுண்மை யடைவிலே*யெண்ணெய்நெய்யும்
வண்மையாய்ச் செய்யும் போது பக்கத்தில் வாயுத் தீரும்
உண்மையா யுரைக்கு மாயுள் வேதத்தி னுறுதி யாமே. (௮௮)

### உ. கபாலபித்தவாத குணம்

சென்னியிற் பித்த வாதஞ் செய்குறி யுரைப்பக் கேளாய்
அன்னித மாகப் பேசு மயர்வுறு மாடும் பாடும்

---

*இரட்சைசெய்து புண்ணாறியபின் கபாலவாததத்திற்குச் சொல்லிய தைல முதலியவையே இதற்குமாம்.

விண்ட பிரமி சிறுவழுதில் வேலிப் பருத்தி துளசி கொச்சி
பண்டையுள்ளி யிஞ்சி தொய்யில் பசளி காரை செங்கொட்டி.

இயம்பிய மருந்தோ ரொன்று பலம்பத்தா யினிது கூட்டிப்
*பயம்படி நாறுவிட்டுப் பற்றவே யெட்டொன் றாக்கி
நயம்பெற வடித்துக் கொண்டு நறுநெய்கா ழுழி யோடு
தயங்கிய வான்பா லுறு படிவிட்டுச் சரக்குக் கேளே. (௬௬)

கேளாய்நற் கடக சிங்கி கிராம்புசுக் கரத்தை யேலம்
தாளிசபத் திரியோ டிந்து தகரங்குங் குமமே கன்னூர்
வாளாரும் விழியாய் சீனி வனசப்பூ வளைய மல்லி
கோளில்மூக் திரிபே ரீஞ்சு கூர்கண்டில் வெண்ணெ யோமம்.

ஓங்கிய கண்டங் காரிவிரை யுடன்வெட் பாலை விழாலரிசி
பூங்கொம் பனையாய் தெசமூலம் பொரியுங் காரஞ் சடாமாஞ்சில்
பாங்கோ டரத்தை சிறுதேக்குப் பச்சிலை மதுரக் தாரமுடன்
ஆங்கால்மருந்துகழஞ்சிரண்டாயரைத்துக்கரைத்துவடிப்பதுவே

வேறு கரண்டி நாற்பதுநாள் மெய்யே கொள்ளச் சேற்பமறும்
ஊறுங் கோழை புலானுற்ற முண்ணு மசன முவாந்திவிக்கல்
மாறுங் கபால வாதமிவை வாரா தேபோ மெனமுன்னோர்
கூறுங் குணத்தை யாய்ந்தறிந்து குறித்துச் செய்ய வல்லீரே.

## ௪. கபால வாதசேத்தும குணம்

மின்னே கபாலந் தனில்வலித்து வேர்த்து வெதும்பிப் பற்கிட்டி
முன்னே வாய்நீர் வழுவழுத்து முகமும் வெளுத்தே யிருமலுமாய்
அன்னந் தானுஞ் சிறுத்து விம்மி யாக மூலர்ந்து கண்குழியும்
பொன்னே கபால சேத்துமத்தின் பொருந்து வாத மிதுவன்றே.

## சிகிச்சை

## திப்பிலி ரசாயனம்

நல்ல திப்பிலி பலமொன்று §நாக கெந்திகற் கடகசிங்கி
சொல்லுந் திரிபலை மாஞ்சரத்தை சுக்குக் கோட்டம் விழாலரிசி
வல்ல சிவதை கடுரோகணி மதுரந் தேவ தாரமுடன்
புல்லுஞ் சீரக முந்திரிகை பொன்னே யேலங் கராம்புடனே. (௧)

*பயம் - தண்ணீர். §நாககெந்தி - சிந்தில்,

அத்தைநீ தறித்துத் தூணி யமிர்திட்டுக் குறுணி யானல்
மத்தெருக் குவாயே சங்கு வளர்முருக் கிலையின் சாறே. (உ௬உ)

சாறென்று நாழி விட்டுச் சாற்றெண்ணெய் குறுணி கூட்டி
ஊறினன் மிளகு சுக்கோ டோமமாஞ் சாத்தை கொட்டி
வேறுள விழால்வெட் பாலை வெந்தயம் விளங்க மிந்து
கூறிய தேவ தார மதுரமுங் கூறக் கேளே. (உ௬௩)

ஏல நாகம் பூக்கோட்ட மிருசீர் வசப்பு மூர்திரிகை
சீலச் சந்தன மதிவிடயந் தேற்றாக் கொட்டை மஞ்சளுடன்
கோலச் சாதி காரம்புபத்ரி வெண்குந் திருக்க மரமஞ்சள்
சால வொன்று முக்கழஞ்சு தப்பா திடித்துத் தூவுவதே. (உ௬௪)

தூவிப் பதத்தில் வடியிட்டுச் சொன்ன வெந்நீர் முழுகிவர
மேவுஞ் சிரத்திற் றிமிர்கனப்பு மின்னே யிரத்த நீர்வாயு
கோவித் திடிக்குஞ் சூலையுச்சிக் குத்துப் பிடரி வலியிவைகள்
தாவிப் பதறி யோடுவது தப்பா திதனைச் செய்வீரே. (உ௬ரு)

## 2- நிப்பாதித் தைலம்

நிப்ப மெட்டி யாயி ஞெச்சி நீலி புங்கு வாகையு
ே ராய பேய்த்தி மிட்டி வீழி நீணி லத்தி யங்குவாய்
பம்பு வெண்க டம்பு வேலி வேளை குப்பை மேனியும்
பற்ப டாக மோடு சீந்தில் பாலை சித்ர மூலிவேர்
விம்ப வாயி ஞய்ப திப்ப லங்கொள் தூணி நீரில்
வெந்து மீள வேயி றுத்து விட்டு நீவி ரைந்துகேள்
தம்ப மான வெண்ணெய் நாழி நிம்ப வெண்ணெய் நாழியுஞ்
சாரி சுக்க ரத்தை மஞ்சள் சன்னி நாய ஞேயமே (உ௬௬)

ஓது தேவ தார மாஞ்சில் ரோணி மேதை சீவக
முள்ளி காரு கோல்கி ளங்க மூறு கண்டில் வெண்ணெயும்
சீத முற்ற முப்ப லைசி றந்த பஞ்ச வர்க்கமுஞ்
செப்பு கெந்த ராசி குக்கில் சேர முக்க பூஞ்சதாய்த்
தாதெ பூப்பொ டித்தி டித்து வெந்து கற்ப தத்திலே
தைல மிட்ட போது சென்னி தங்கு சன்னி குத்துடன்
காதி ரைப்ப டைப்பு டன்க னப்பு வெய்ய பித்தமும்
காத தூர மோடு மோடு முண்மை யுண்மை காணுமே. (உ௬எ)

கமழிலா மிச்சு கருங்காலி—நமக்குரிய
சிந்திகுறுந் தொட்டி திரிகடுகு முப்பலையும்
பேராந்தலை சூடுவல்லி பொன்முசுட்டை—ஆய்ந்துகொள்
வேங்கை வயிரமுடன் வில்வவேர் நன்னாரி
ஓங்குசிறு கொச்சி யுவாய்வேரும்—பாங்கான
முட்சா றடைவேரு முன்னைவே ரும்புதிய
கொட்டைவே ராயில் குமிழம்வேர்—பட்டை
*விரிபூட்டின் வேரு மியங்கம்வேர் மின்னே
பரிவாக வொன்றுபலம் பத்து ச்—சரியாகத்
சேரத் தறித்துச் சிறந்தநீ ரெண்மரக்கால்
ஆரவெட் டொன்று யதுதெளித்து—வார்முலையாய்
நல்லெண்ணெய் நாலுபடி நாட்டுமிள நீர்பாலும்
புல்லுஞ் சமமாய்ப் பொருந்தவிடு—நல்ல
கனக மிளகுபொடி கார்குழலீர் படிநால்
வினவி யிருகுறுணி நீர்விட்—டனவிருத்தி
நாலொன்றாய் வற்றி நசுக்கிப் பிழிந்துவிடுத்
தேலுமுறை கற்க மியம்புகேன்—சால
மதுரமொடு கோட்டம் வசம்பு குளவிந்தம்
புதிய கராம்புகர்ப் பூரம்—நதியுதவும்
தேவர்கள் தாரு திருவிந்து முந்திரிகை
பாவு மதியுப்புப் பச்சிலையும்—காவிலுறை
நன்னாரி மூத்தநா னஞ்சுக்கே லங்கடுகு
கன்னாரும் கன்மதமுங் கண்டில் வெண்ணெய்—பன்னுமிகு
நற்சந் தனம்பச்சை §நாகே சரமகிழம்
பொற்பூ வதிவிடயம் பூதவிர்க்கம்—நற்கெருட
பச்சையொடு தாளிசமும் *பஞ்சவா சம்விளங்கம்
நச்சுநஸ் தூரிமஞ்ச ணால்லநுக்கு—மெச்சுகின்ற
கோரோ சனைகுங் குமப்பூப் புழுகுசட்டம்
பார்சே ரத்தை பசுமஞ்சள்—கோராகக்
கூட்டொன்று முக்கமுஞ்சு கூட்டி யிடிபொடித்து
மீட்டு மெண்ணெய் மீது விரவியே—நாட்டமாய்

§நாகேசரம் நாகம்பூ ○பஞ்சவாசம்-தக்கோலம்-சாதிக்காய்-பச்சைக் கர்ப்பூரம்-இலவங்கம்-வசுவாசி
○ஆதளை - ஆமணக்கு *விரிபூடு-பற்படாகம்

மத்துங் திரிகடு கிருசீரம் வாயு விளங்கஞ் சாதிக்காய்
அத்தி னொடு கராம்புபத்ரி யரிய வோமங் கடுகு வெட்பால்
சித்ர மூலங் கார்கோலுஞ் சிவனார் வேம்பு வெள்ளறுகே. (௱௨)

கேளாய் வேம்பின் பட்டையுடன் கிளருங் புங்கின் றோல்வசம்பு
தாளா தொக்கச் சமன்கொண்டு சற்றே வெதுப்பி யிடிபொடித்து
நாளே மதுவிற் குழைத்தருந்திநவி லும்பத்யமண்டலய்கொள்ளத்
தாளா தோடுஞ் சிரசூலை தவிருங் கிரந்தி பறங்கியுமே. (௱௦௩)

கபால சூலை முற்றிற்று.

---

## XIII கபால சன்னிக் குணம்

உகைத்தே சிரத்தின் மிகவலிக்கு மூடப்பு வேர்க்குங் கண்சுழியும்
புகைத்தே யிருமுங் காதடைக்கும் பொருந்துகாவும் வரண்டுவரும
மிகைத்தேயுடப்பு கருகிவருமெய்யே நடுக்கும்விழிசுழற்றும் [யே
பகைத்தேயிளைப்புவாந்திவிக்கலுண்டாங் குணத்தைப்பார்த்தறி.

ஓங்குஞ் செவியிற் சீவீழு மூலர்ந்து நாறு மொடுமொரு
ஆங்குக் கைகா லசந்திருக்கு மரம்போ லாவுங் கறுத்திருக்கும்
தூங்குங்கண் ணுனும் புகைந்துவருஞ்சொல்லும் பேச்சுமறப்புண்டா
ஈங்குச் சிரத்திற் சன்னியிதென் றியம்பு மாயுண் மறைதெரிந்தே.

### சிகிச்சை.

### 1- நிப்பாதித் தைலம்

நிம்பம் பட்டை யாயி னொச்சி கோரஞ் சிந்தில் தழுதாழை
பம்பந் திராயு நிலவாகை பரிய மூட்சா றடைகொழிஞ்சி
உம்பர்க் குரிய கூவிளைவே ருடனே நாரி சிறுவழுதில்
வெம்புங் கருடக் கொடிசிவனார் வேம்பு சித்ர மூலியுமே (௱௦௬)

மேவு மருந்து பலம்பதது மின்னே தறித்தெண் மரக்கானீர்
தாவிக் காய்ச்சி வடித்தபின்பு சாற்று மியங்கு சிறுவேம்பு
பாவுஞ்சாறடைகொழிஞ்சிதும்பைபகர்ந்தகையான்செம்பூள்ளி
காவி னொச்சி தழுதாழை கருது மொன்று சாறரியே. (௱௦௭)

உரியவெள் ளாட்டின் பாலு முழுந்துகா ணத்தின் சாறும்
அரியநல் லெண்ணெய் தானு மிளநீரு மளாவி விட்டுக்
கரியசீ ரகமோ டுள்ளி காருகோல் கடுகு மஞ்சள்
திரிகடு புலியோ டோமஞ் செங்கழு நீர்க்கிழங்கே. (௱௦௮)

## சிகிச்சை.

### மயிலடிக் குருந்தெண்ணெய்

குருந்து தூதுளை கோடக சாலையும்
விரிந்த கூந்தன் மிளகுறு தான்றிவேர்
பரிந்த சிந்திலொ டாயில் பனைமடல்
சரிந்த கொன்றை தழுதாழை நொச்சியே. (௧௫௨)

ஏய காரை யியங்கு பொடுதலை
தூய சேவகன் பூடு துதிகையும்
ஆய நெல்லி யரிதகி காரகில்
பாயு நீரொரு தூணியும் பாய்ச்சிடே. (௧௫௩)

பாய்ச்சு நீர்விட்டுப் பற்ற வடியிட்டே
ஆச்ச தாகி லரியநல் லெண்ணெயும்
பீச்சு பாலிள நீர்விட்டுப் பேசக்கேள்
வாச்ச தார மதுர மரத்தையே. (௧௫௪)

ஏலங் கோட்ட மிலவங்கம் பத்திரி
ஓல மாஞ்சி துரோகணி மூப்பலை
மேலு மேதை விளங்கத் திரிகடு
கோல வெட்பா லுளுவை சுடசப்பால். (௧௫௫)

பாரில் வெட்டி யிலாமிச்சுப் பன்னையும்
கூரு சந்தனங் கோரோசனை சட்டம்
சார் கராம்பொடு சாதிக்காய் பத்திரி
ஓரொவ் வொன்று முழுமுக் கழஞ்செடே. (௧௫௬)

இடித்துத் தூள்செய் திதனில் விசிறியே
வடித்துத் தேய்த்திடு மண்டையுண் மூளையில்
பிடித்த சேற்பன வாதம் பிரிந்துடார்த்
தடித்துர சாடி யலைகடல் புக்குமே. (௧௫௭)

### ௫- அமுத வாத சேற்பன குணம்

எய்திய வமுத மீதே யியம்பிய வாத சேற்பம்
செய்குறி யதனைக் கேளாய் சிரத்தினீர் சேரும் வேர்க்கும்
ஐயுமே மிகுந்து நோவா யரியவெப் பிருமலுண்டாம்
கைகால்கள் கசிந்து காட்டுங் கண்முகம் வெளுக்குங் காணே.

நவ்வுசிறு தாழைவிழு தோடுறுவல் லாரை
நற்குமரி நாரியெனு மிச்சினுட னணல்
தவ்வுமிரு வேலிபுளு கூவிளமு சுட்டை
சாருநறை மிச்சுமிவை சோசமத மாமே. (௩௬௫)

மேவியிரு தூணிநறு நீர்விரவி மின்னே
வெந்துவடி கொண்டிளநீ ரந்தமுறு பாலும்
ஆவலுறு மெண்ணெய்படி நாலுமதில் விட்டு
மக்கிதவிர் நன்மதுர மிக்கதெய்வ தாரம்
காவிலுறு மேலமகில் சீரகமொ டிந்து
கற்கெருட பாசைபுலு வாவுறுக ராம்பு
தூவுசத குப்பைகடு ரோகணிய ரத்தை
சொல்லிய §மரிசினரி திப்பிலிகொள் சுக்கே. (௩௬௬)

கொட்டமொடு குங்கும மிலுப்பைமலர் சந்தங்
கொத்தமலி செண்பழுகை மாஞ்சிலில வங்கம்
இட்டமுறு கர்ப்புரமி தொப்பிடைகொண் மின்னே
யேலநெரி யரிசிபுழு கோடிவை கழுஞ்சாய்
வட்டமுலை யாய்பொடிகோ டுவுதயி லத்தை
வாகுபெறு கோவுதவு பாலுமது நாழி
கட்டளைய தாகவிடு வெந்துவடி கொண்டே
காதலுற வெழுபூகின் மூளையனல் போமே. (௩௬௭)

## ௩- சிரசில் மத்திக்க மருந்து

நெல்லிக்கனி யதன்றோலொடு நிகரில்சிறு பயறு
வெல்லக்கொளு மாவெண்ணெய் மேவும் மதிமதுரம்
வல்லிக்கொடி யிடையாய்நன் *மலாக்கா யிவை யைந்தும்
சொல்லிற்பனி நீராலரை சிரமர்த்தனை சொலுவாம். (௩௬௮)

ஆவெண்ணெய்கொண் டுன்பெயதி மதுரங்கொளு மப்பால்
காவுந்திய சந்தங்கொளும் பின் §ஆமல கனியே
தாவுஞ்சிறு பயறும்மதன் பின்னுமெனச் சாற்றும்
மேவுஞ்சிர தரபாதமுந் தேய்த்தேழுபூ காயே. (௩௬௯)

---

‡மரிசினரி-வெள்ளை மிளகு. *மலாக்காய்-சந்தனம். §ஆமலக்கனி-நெல்லிக்காய். *சூதம் என்றும் பாடம்.

## சிகிச்சை

### சந்தனாதி நெய்

இக்குண மறிந்துகொளு மீதகல நெய்கேள்
தக்கநறு நெய்யினொடு சந்து§சடை கோட்டம்
மிக்கநெரி யரிசிமிகு கர்ப்புர மினுங்கேள்
*முக்கடுகு முப்பலையு மேலமுறு சீரம். (௪0௯)

தேவதரு ரோசனைகொள் சிவகம் விளங்கம்
ஆவலுறு முந்திரிகை யானசத குப்பை
தீவிரைய வேசமன தாகவிடு நெய்யில்
மேவுமிள நீரினொடு பாலும்விடு மின்னே. (௪௧0)

நெய்தலொடு செங்குவளை நேர்வனச மாம்பல்
தொய்யில்புளி யாரைசிறு கீரையுடன் முத்தி
ஐயமகல் கொவ்வையுட னாகவிவை யொன்பான்
நையவிடி சாறுபடி நாழியிவை யொன்றே. (௪௧௧.)

ஒக்கவி டளாவியெரி யிட்டுறு பதத்தே
புக்கவடி சீனியிடு பொற்புறு மடந்தாய்
நக்குசிர மர்த்தனைகொ ளுசியிடை வார்நீர்
மிக்கதனி மூளையு ளிரத்தமிவை தீரும். (௪௧௨)

### அமுதசூலை - ௩

சாத்தியம் - ௧. கட்டசாத்தியம் - ௨

வெப்பமுறு சூலையது மேவுகுண மின்னே
எப்படிய தாமெனி லியம்புமுறை கேளாய்
துப்புடைய நீர்குருதி 0யூதைதொகை மூன்றில்
தப்பித மிரத்தமுட னே§சலில மாமே. (௪௧௩)

ஊதையுறு சூலையது தீருமிக வுண்மை
வாதைசெயு நீர்குருதி மாறலரி தாகும்
ஆதியரு ளுரைசெ யாயுண்மறை யாய்ந்தோர்
ஓதிய குணங்குறி மருந்தையு முரைப்பாம். (௪௧௪)

---

§சடை - சடாமாஞ்சில். * முக்கடுகொ டேல்முறு சீரகமதாமே என்றும் பாடம்.
0 ஊதை - வாயு. § சலிலம் - நீர்.

தகைப்புறு மஞ்செண்ணெய்த் தைலம தால்விரவிக்
3க்வைபுற வெயில்வைத்துக் கட்டுவைபினைநீயே. (௪௯௮)

நீயொரு சட்டி சுடவைத்தெரி நிம்ப நெய்யில்
தோய்சிர நெற்றி பிடர்தோள் செவிசுற் றினிலும்
நேய்மொ டொற்றிட நேரிழை மாமயில்கேள்
போயிடும் வெப்புறு நோய்வா தமும்புகல் வேனே. (௪௯௯)

பிடர்வலி தனுவாதம் பிரவலி திமிர்வாதம்
இடருறு விறைவாத மெரியெழு *சனி வாதம்
சடமுறு மெரிவாதந் தளர்வுகொள் வெகுமோகக்
கொடுமைசெய் கடுவேகக் குதிரையின் வலிபோமே. (௪௪௧)

## செவியில் வாதம் பலவுக்கும்
## விஷ முட்டித் தைலம்

எட்டி கொன்றை யாயில் புங்கி யங்கு புன்னை யாதளை
யிலுப்பை oசென்னகாரை வேங்கை யித்தியத்தி ‡யாரமும்
வட்ட மாம டப்பு தும்பை மாவிலங்கை நீலியும்
வாகைகூகை வக்க ரைத்தி மஞ்ச ணத்தி கொம்மடி
கட்ட மான பேய்த்தி மிட்டி காரை†கன்னி காரமுங்
கார்த்தி கைக்கி பூங்கொ டேலங் oகாத்த குட்டிநொச்சியும்
சட்ட மான வேளை மேனி சங்கு குப்பி யிருவாய்
சாத்ர பாண்டி சித்ர மூலி தக்க கள்ளி நாலுமே. (௪௪௧)

நிம்ப நாறு வீழி வெள்ள றாகு காக்க ணம்முடன்
நீரின் மேனெ ருப்பு மிக்க நீணி லத்தில் வாகையும்
பம்பு கொட்டை யிருகுறட்டை பாலை முன்னை பாதிரி
பங்கம் பாளை நரி வெருட்டி பாரின் மேவுமிருகுமிழ்
வெம்பு தேட்கொ டுக்க தண்டை வில்வ மீசுர மூலியும்
வேலு நல்வி டத்த லைவி ரிந்த பூடெ ருக்குமே
கொம்ப ணுய்கொ டிக்க முற்க ருட வள்ளி மூவிலைக்
குருந்து நீள்வ னசமுங் §குறுந்த முட்டி வேருமே. ( )

3 கவைபுறவேப்பிறுசக்கட்டுவை என்றும் பாடம். *சனிவாதம்-சன்னிவாதம், oசென்னகாரை-செங்காரை, ‡ஆரம்-ஆத்தி. †கன்னிகாரம - கோங்கு, oகாத்தகுட்டி-காற்றோட்டி. §குறுந்தமுட்டி-குறுக்கொட்டி,

வகைக்கொராறு பலத்திநொடு தறித்திடதை
மறுத்துமிடி மதித்து விடுநீர்
உகைக்குமிரு கலத்திநொடு சிறக்கவெரி
பதக்குவடி யுரைத்த படியே
துகைத்தயிலு மெளிற்றயில 2மயப்பயமும்
வகைக்குவகை தொகுத்த வளவே
புகைக்களப விரைக்கலவைப் புதுப்பணிநிர்
மலர்க்குழலி புகட்டி டதிலே. (௪௫௨)

திரிகடு கிருசீர் வசவொடு கறுவாத்
திரிபலை யுழுவா - விளங்கமோ
3டறுவகை யரிசி கிளியுறை நெரியா
ரவிநொடு வசுவா - சருங்கண்ணர்
வெறியுறு லகிரி வகையொடு திருவார்
4மிருகமத குழுவார் - சயிந்தவமும்
நறுவிய புழுகோ டிடவக முதலாய்
நவில்வகை யதுவோ - தெரிந்துகேள். (௪௫௩)

மருவு மஞ்சள் வகைநாலு வுரிய செண்பக மலரோடு
மதுரமுந்து கடுரோணி மகரமந்தமுறுசீரக—மதநொடே
பொருவுசந்த மிருவேலி புதியசங்க முறுபீலி
கிளைவை நிம்ப பிசிநொடு புகலுமிஞ்சி மதுமேவு—கனிதானும்
சரிகொளொன்று பொடிதூவு பதமறிந்து வடிவேறு　[ கேள்
தயிலமொன்றி லடைநீயொர் சலனமன்றி புழுகாய்பி—னறுநோய்
இரையுமந்த வலிசூலை யிடிகள்பம்பு சலசூலை　[ நீருமே
யிடர்செய் வஞ்சச் சனிசூலை யெழுதுமந்த வுதைசூலை—யிவை

## உ. வாயுச் சூலையின் குணம்

வாதை மிகுத்தெழு சூலை விதத்தினை யோதிடு மிக்குறைகேள்
மோதி யிடித்திடு நீள்செவி சுற்றுற மோக மயக்கமுமாம்
வாதை மிகுத்திட வேசிர மொக்கவு மாறரு வெப்பமுமாய்க்
காதடி தொட்டல கோடு கவுட்டல மீது கனக்குமதே. (௪௫௫)

2அயப்பயம் - வெள்ளாட்டுப்பால்.

3அறுவகையரிசி - வெட்பாலையரிசி, விழாலரிசி, கார்புகாவரிசி, வாலுளுவை யரிசி, உருளரிசி, உழுவா அரிசி. 4மிருகமதம் - கஸ்தூரி.

சன்னியொரு நால்வகையுஞ் சார்வாதம் - கன்னமதில்
வெருவுமிடி திமிரயர்வு செயல்குருதி யிரைவுளைவு
தருமுழலை யொடுமெரிவு மிகுவிரணன் - பொருவரிய
சிரத்தில்வெயர் கடுப்புளைவு சிறுத்தகுரா லிளைப்பிருமல்
பெருத்தக்கரப் பிசிப்புமிகு பிடிப்புவலி - வருத்தமிவை
ஒழியவிரு செவியில்லடை யுறப்பூழூது கசியமிடு
பழியகலு மெழிலுடைய களபமுலை - மொழிவதுகேள்
உப்புப் புளிப்புமறு கைப்புத் துவர்ப்புமொழி
வெப்புத் துணுக்கமறு மப்பைத் தரித்தசடை
ஒப்புத் தணந்தபொரு ளப்பொற் சிலைக்கருளும்
அதுதெளியு மசலமுனி யுரைசெய்தமிழ் வளமுணரும்
அறிஞர்சவை யாய்ந்து தெளிவதுபரி காரமே. (௪௫)

## IV. செவியில் விற்புருதி. சூ.

செவியிடை முரணுற விரணம தெழவழல் செறிவுறு விற்புருதி
தெளிவுற வறுவகை யுளததி னுறுபெயர் குறிபுற நீயறிவாய்
குவிதசையொடுமடுவிரணம துடன்மிகு கொடுமைசெயென்புடனே
குலவிய புற்றிவை யாறினி லொடுமடு குளிர்தசை மாறிடுமாம்
பவமிகு புற்றொடு விரணம தென்பிவை பகரிடின் மாறரிதாம்
பரிமள மிர்கமத மழவிய முலைமயில் பரிவுட னிவைகேளாய்
அவிர்சடை யரனுமை மலைமகள் மகிழ்வுற வருடருமறை பேசும்
மழகிய குணமொடு மகல்வுறு மவுடத மவைசொல வறிவீரே. ( )

செவியில் விற்புருதி ஆறு. அவை; தசை விற்புருதி, ஓடிவிற்புருதி, மடிவிற்புருதி, விரணவிற்புருதி; என்புவிற்புருதி, புற்றுவிற்புருதி, என்பன. அவற்றுள் ஓடி, மடி, தசை மூன்றும் சாத்தியமாவன—ஏனைமூன்றும் அசாத்தியமாவனவாம்.

---

1கண்டிசெய் கல்லாசெய் என்றும் பாடம். மூப்பழம்-கடுக்காய், செல்லிக்காய் தான்றிக்காய். உசிர்-லாமிச்சம்வேர். மஞ்சள்வகை-மஞ்சள்நாலு. சாணமணி-பெருங்காயம். சீரியர்கள்-இருசீரகம். நாகு-நாகம்பூ. புரி-வலம்புரி. செரி-செரியரிசி. பாசி-பச்சை. திறுவி-திருவிடம். இலசுனம்-உள்ளி. வசவு-வசம்பு. கறுவு-கறுவாப்பட்டை. வெறிகொள் வகை-தக்கோலம், ஏலம், இலவங்கம், கர்ப்பூரம், சாதிக்காய். மிருக மதம்-கஸ்தூரி. வினாசகம்-நாகணம். திரிகை-முந்திரிகைப் பழம். உரகதசை-சர்ப்பக் கண்டம். முசிறிநாரி-முசிறுமுட்டை. கிருமி-கிருமி சத்துரு. தழுதாழை-வாதமடக்கி. பரியாரி-குதிரைவாலி. ஒட்டு-புல்லுருவி. உயில்-சீக்கிரிப்பட்டை. மத்து-ஊமத்தை. இடங்கணம்-வெங்காரம். அலர்-பொன்னரிதாரம் என்றும், கிப்புரிசை-இரசகர்ப்பூரம் என்றும் கூறுப.

துன்னுறு துளிகள் பின்விடு மேனு மன்னது பூச மதுசூர்வே
சன்னியி னுய வின்னல்செய் தோஷ மன்னது நீருமியல்பாகவே.)

## சுர எழுச்சிக்கு.

1 சுரத்துறு மெழுச்சியெனதிற்கதலி யுற்றெழு
துடக்கமது தன்னை மிகவும்
மருத்துற வழற்றிய தொழுக்கவது சுற்றினின்
மறித்திடு மரைத்த தனையே
வருத்திடு பெழுச்சிகள் செறித்திடுச லக்குணவை
மயக்கிடு மிரத்த மவைபோம்
தெரித்தமி ழகத்திய முனிக்கர னுரைத்தருள்சி
கிச்சைதனை யுற்ற றிவதே. (௫௧௩)

## செவி எழுச்சி பலவுக்கும் கோடாசுரி கிருதம்

2 துரிசுமவி னோடு சோகியு மரிசுசொ லால மாமணி
துவர்சிகை பூத நாரொடு சுழலாவிரை
அரியவசு வாசி சாதியு மகிலுந லேலல மாறரி
யயில்புழு கோம சீரக மதிமதுரமும்
புரிவசவு தானு நீள்சிலையு முரைலசுண கறுவு மானமுறை
புகலுமிவை மீறி டாதுசம னுகவே
மருவுநெயி னோடு வேகவை யுரைகடவ ருது வேறெடு
வடவையனல் போலு நோய்களவை மாறுமே. (௫௧௪)

## செவியிற் கரப்பன் ௮.

3 செவியிற் கரப்பனுறு வகையெட் டதற்குவகை
தெரியக் குறித்த றிவைசில செப்புகேன்
அவையிற் பெருத்தவற லணலக்கி பொக்கிவெடி
யழுகிச் சிலிர்த்தி தலைசொறி யெட்டுமே

1 கதலியுற்றெழு துடக்கம்- வாழைமுகிழ்க்கு.
2 ஆலமாமணி-புங்கம் வித்து. துவர்சிகை-கடுக்காய்ப்பிஞ்சு. பூதம்-சடாமாஞ்சில். நார்-கல்நார். அயில்—கோரைக்கிழங்கு.
3 அறல்-நீர் திதலை-தேமல்

சால விவற்றிலொன்று சால்பாக—ஏலும்
பசுமணக்கி னெய்யாற் பதமாய் வறுத்துக்
கசிய வரைத்திடவே கன்னம்—இசையும்
பருவனைத்துந் தீருமெனப் பண்டை முனிவர்
உரைசெய் திறமதனை யோர். (௫௨௬)

## வீரகேசரி.

1 காதிற்பருவிவைமோதித்தெழுமெனிலோதற்கருவலியுளதாகும்
காவிற் படர்கொடு வேலிக் கடுதிரி மோதச் சயிலவ மொடுகேளாய்
பாதிப் பிறைநுதல் சாதிச் சாரமு நீதிக் கெவுரியு மரிதாரம்
பாஷத் துடனெலி வீரந் தொடுகாஞ் சூதச் சிலைதுரி சொடுகாரம்
தீதற் றிடுதிரு மேனித் தயிர்வெளை சேரப் பிழிவடி யரைசாமம்
தீர்தற் கருபரு வாதைப் படமுன மோர்வுற் றிடுமது வழிபூசு
வேதப் படியர னார்சொற் படிமலை மீதிற் குறுமுனி யருளாலே
வேதித்திடுமிவையோதிற்குளிகையிம் மேலைத்திசையினுமிலையே.

## செவியிற் சீ புழு முதலியவற்றிற்குச் சிகிச்சை

எருக்கலையிற் பழுப்பு நொச்சி வேளை தன்னோ
டிஞ்சியுவாய் மூலமுடன் பிரண்டை தம்மில்
நெருக்கிவரு மோரொன்றிற் சாறு ழக்கு
நிம்பெண்ணெ யெள்ளிலெண்ணெ யுழக்குக் கூட்டி
மருக்குலவுங் குழன்மடவாய் கடுகு மூன்று
வருமேல மோருள்ளிப் பூடு கஞ்சா
உரைத்ததனில் விதையுடனே கரிய சீர
மொன்றுகழஞ் சரைகரைத்து வடித்தி டாயே. (௫௨௮)

வடித்தவெண்ணெ யிருசெவியில் வார்க்கச் சீபோம்
மத்தின்காய் பாவட்டை யுத்த மாணி
தொடுத்தவிவை துளசிரண்டு முதலைக் கட்டஞ்
சொல்வசம்பு வெள்ளையுள்ளி தோன்றுஞ் சாற்றில்
அடுத்த செவிப் புழுவொழியு மற்றுங் கேண்மி
னுடுதொடா மூலியிலை பூவார் மத்தின்

1 கடுதிரி-திரிகடுகு. பாஷம்-பாஷாணம்.

கூற்றறு கடுக்காய் தான்றி கூறுநீ ராலரைத்துப்
போற்றுறு விழியிற் றீட்டப் புகன்றவெள் ளெழுத்துப் போமே.

## கடுக்காய்க் களிப்பு

நவபரண்டங் தனிற்கடுக்கா யிட்டு மூடி
நலம்பெறமண் பூசியெரி மூட்டிப் பின்னர்க்
கவையுடனே பலமொன்று துரிசு துத்தங்
காட்டுமெகி னிற்பொருக்குச் சுட்ட சாப்பல்
அவை சமமாய்ப் பலமொன்று கலத்தி லிட்டே
யாவெண்ணெய் கூட்டிமறு கலத்தா லாட்டிச்
சிவனருளாற் கண்ணிலிட விழிகண் காந்த
றீருபட மயிரெரிச்ச லெழும்பூ வாதி. (சுகசு)

## திமிரத்துக்குச் சூத உண்டை.

கருத்துமிகு சூதமுட னீயக் துத்தங்
காட்டுசுரி மூகஞ்செம்பு காண வெல்லாம்
உரைத்தபடி சுத்திமிகச் செய்து கொண்டே
யொன்றினுக்கொன் றிரட்டியதா யுவந்து கூட்டிப்
பருத்தவெனு மிச்சையினிற் புளியி னாலும்
பணமட்டைச் சாற்றினிலும் பரிந்த ரைத்தே
தெரித்தமுறை விழியிலிடப் படலங் காசந்
திமிரமுத லானவெலாந் தீரு மன்றே. (சுகள)

## மாங்கிஷ வளர்ச்சியின் குணமும் சிகிச்சையும்.

கண்ணதுவு மிகச்சிவந்து நொந்து வீங்கிக்
கருமணியுள் ளேறிநீர் கதிக்க வீழும்
திண்ணமுறச் சதைவளர்ந்து விழியை மூடித்
தினவுடனே வலியுண்டா மிமையும் வீங்கும்
புண்மிகவாய்ப் பழுத்துடைந்து சியனீ ரோடும்
பொல்லாத நோயிதுவும் புழுவே கொள்ளில்
பெண்மணியே விரிவுகண்ணிற் கிருமி தீரப்
பேசியதன் முறைபுரிந்து பின்னர்க் கேண்மின். (சுகஅ)

ஆயிழையா யெடுத்ததனின் மூலைப்பா லன்னை
 யனடவாக விட்டரைத்துச் சிலை யூட்டி
மேயசிமி வுலர்த்தாக வுலர்த்தி யேதான்
 விரைக்தொழுக்கி னயசுத்தி லெழுச்சி தீரும்
தூயமதி போற்குளிர்ந்து கண்ணி லேதான்
 றோன்றுத வியாகணமுக் தோன்றும் பின்னை
மேலவிதன் பேர்தாம்பிராதி யென்று
 மேதினியோர் தமக்கறிய விரித்திட் டாரே. (கூசங)

## ஆணிப்பூ பில்லத்துக்கு

விரித்திடும்வேர் கொடுப்பைசா ரணையே சில்லி
 வெட்பூலா வெள்ளைக்காக் கணத்தி னோடு
தெரித்திடுநற் புளியாரை செம்ப ராவுஞ்
 சேர்கஞ்சக் தராவின்சத் துடனே ரண்டம்
பரித்திடுமுட் பறுப்பிவைக ளோர்க முஞ்சாய்ப்
 பான்மையுறு துரிசுதுத்த மிரண்டே யாக
அரைத்திடுவீர் மிரிசத்தின் பழச்சாற் றாலே
 யாணிப்பூத் தழும்புபில்ல மனைத்தும் போமே. (கூசச)

## நீர்ப்பாய்ச்சல் சொறிவுக்கு

புளியியங்கு முசுமுசுக்கை யாதளைபாற் சோறறி
 புன்ருறிஞ்சா வுடன்சிற்ற மட்டிவலம் புரியும்
அழிவிலில் சமன்கொண்டு குடலைதனிற் பொதிந்தே
 யடுப்பினுறு சாம்பல்புதைத் தவித்தபதத் தெடுத்துக்
கழிவிறுத்தக் துரிசு பச்சைக் கர்ப்பூரஞ் சரியாய்க்
 கலப்புறத்தி லிட்டுவட்டில் கலியப்புறசன் கரைத்தே
இழிகண்ணீர்ப் பாய்ச்சலொடு சொறிவுபல கண்ணோ
 யிவைதமக்குக் குழம்பாக்கி யிடுகமட மானே. (கூசரு)

## கண்ணோய் பலவுக்கும்

தலையோடு துத்தமொடு துரிசித் துப்புச்
 சாற்றுகின லிரண்டோடு கால ரைக்கால்
விலைமேவு மெலுமிச்சம் பழச்சாற் றாலே
 வியந்தரைத்துக் கண்ணிலிடு வேறு துத்தம்

## அசாத்தியம் மூன்றில்

### 1 பசுவிழிப்படலம்

வசையறு கருப்பி னுள்ளே மரகதம் போன்று கட்டித்
திசைபரந் திழியு நீருந் தழலது போலக் காந்தும்
இசையவே யொளியு மங்கு மிக்குணங் காணு மாயின்
பசையறு மசாத்தி யத்திற் பசுவிழிப் படல மன்றே. (அஉ0)

### 2 கருநாகப்படலம்

இந்திர தனுவே போலு மியனிறம் பலவு முண்டாய்
அந்தமாஞ் சூழ்ச்சந் தானு மதிர்ந்திடக் குத்தி நோவாய்ச்
சிந்துநீர் மிகுந்து காட்டித் தெரிவிழி யுந்துங் கண்டாய்
கந்தவார் குழலி னுளே கருநாகப் படல மாமே. (அஉக)

### 3 அதிமாங்கிஷப்படலம்

ஊச்சின தசைநீர் போலக் கருமணி யதனி லூறும்
கூச்சமு மிடிபு முண்டாங் கொதித்துநீர் மிகுத்து வீழும்
இச்சுடர் விழிநல் லாளே சிரம்பிட ரிசிய வாங்கும்
ஆச்சுதிக் குணங்கள் கண்டா லதிமாங்க்ஷப் படல மாமே. ( )

### சிகிச்சை பொடி

சீனக் கார மொரு கழஞ்சு சிவந்த காவி யரைக்கழஞ்சு [கித்
மானே யவினும் பணவிடைகொண் மத்தித்திதனைப் பொடியாக்
தேனூர் முலைப் பாறனிற் கலக்கித் திரி லேற்றி விழியொழுக்கப்
போனார் கண்ணிற் படலமெலாம் போகுமென வேப்புகன்றனரே. ( )

### நத்தை நெய்

நறுநெய் யுழக்கு நத்தைசிப்பி நவினு நீருஞ் சரிகூட்டி
உறுநற் சிர மதிமதுரத் தோடு தேவ தாரமவின்
நறிய சீனக் காரமிவை நாட்டு முருங்கைப் பூநீரால்
குறையாதிதனைக் கூட்டிவெந்து குளிரத்தாரைகொள்ளுகவே. ( )

## இரட்சை

இவைசெய மாறு தாகி யியன்றிடு §டங்கலென் னும்
நவையறு கருவியாலே நடுநரம் பறிந்து கொண்டு
0குவைபுறு மிரண்டின் மீது கொதித்தெழு மிரட்சை செய்யச்
சுவைபுற் முனிவர் சொன்ன தாரனை யறிந்து கொள்ளே. ( )

அறிவுசெய் தேழு நாளு மழுந்தவே புண்ண தாக்கிக்
குறிபுற முன்னே சொன்ன மருநதொடு *தாரை கொண்ணீ
மறுவிலா விழியி னுள்ளே வந்திடும் படலம் போகும்
நறைகமழ் குழலி னுளே நாடிநீ யறிந்து கொள்ளே. (௮௯௨)

படலம் முற்றிற்று.

---

## ௩ குமுதம்—௩

சாத்தியம் - ௧ அசாத்தியம் - ௨

கூறிய குமுத மூன்றின் பெயருடன் குணங்கள் கேண்மின்
சிறுசெங் குமுதத் தோடு தெளிகருங் குமுத மற்று
மீறுவெண் குமுத மூன்றில் விளங்குசெங் குமுத மொன்றும்
மாறிடு மற்றி ரண்டு மசாத்திய மென்ன லாமே. (௮௯௩)

### செங்குமுதத்தின் குணம்

### இது சாத்தியம்

சிவந்திடு குமுதந் தானே செய்குறி யியம்பக் கேளாய்
உவந்தகற் கறுப்பின் மீதே யுற்பல மலர்போற் றோன்றித்
தவழ்ந்திடுந் தசையு நீருந் தழலென வெரித்துக் குத்தும்
குவிந்திடு தனமின் னுளே குறித்திதை யறிந்து கொள்ளே. ( )

---

§ அடங்கல் என்னும் கருவி இடைவெளிஇன்றிய பொட்டுச்சூட்டுக்கருவி.

0 குவைபுறுமிரண்டின்மீது என்பது புருவ நடுவில் இரண்டங்குலத்தின்மேல் என்க. அது "புருவத்தினடுவாங் கண்ணில் ஊர்த்துவமதில் குருவுக்கப்பா லங்குல மிரண்டுமூன்றே" என்று பின் வரும் இரட்சைவிதிச்செய்யுளா லறியப்படும்.

* தாரை - முற்சொல்லிய நத்தைநீர்.

## நெரிசல் மூன்றின் குணம்

உட்டண நெரிச ருனே யுருண்டெழும் வெளுத்துக் காட்டும்
மட்டுநீர் நெரிசன் மையங் குளிர்ந்தெள்ளின் வடிவு போலாம்
சுட்டிய விரத்தத் தாலே கனத்திடு நெரிச ருனே
மட்டவிழ் குழலி னுளே மஞ்சாடி வடிவ மாமே. (அசசு)

## சிகிச்சை நெய்

சுருதியி னெரிச ருனே யசாத்திய மென்று கூறும்
தெரியிரு நெரிச லுக்குஞ் செய்மருந் ததனைக் கேளாய்
உருகிய நறுநெய் தன்னி லாரிநீர் முருங்கைப் பூவும்
மருவுநற சிரஞ் சீனக் காரமு மவினுங் கூட்டே. (அசஎ)

கூட்டியே கொதிக்க வைத்துக் குறித்திரு போதுந் தாரை
காட்டமாய் விட்ட வாறே நவின்றிடு நெரிச ணேவு
மீட்டுமக் குத்துச் சூடு மிகுமிடி போமே யென்று
கேட்டுநீ முன்னோர் கூறுங் கிரியையை யறிந்து கொள்ளே. ()

நெரிசல் முற்றிற்று.

---

## சூ வரி ந

கூர்கரு விழியின் மீது கொண்டிடு வரியின் செய்கை
நீரினு லிமையி னுள்ளே நிகழ்ந்திடும் வடிவி னாலும்
கார்குழன் மானே சோரி கடுகியே செறிந்த தாலும்
நேர்வரி மூன்றுண் டாகு மக்குண நிகழ்த்தக் கேளே. (அசகூ)

## வரி மூன்றின் குணம்
### சாத்தியம் க அசாத்தியம் உ

நீர்வரிக் குணங்க டாமே வெண்மையாய் நெடுகிக் காணும்
சேரிமை வடிவினாலே செறிவரி பிறையே போலாம்
கார்குழன் மின்னே சோரி வரியிரு கடையுந் தாவும்
பாரிலிக் குணங்க ளெல்லாம் பண்புற வறிந்து கொள்ளே. (அறு0)

சொல்லிமை வடிவி னாலே தோன்றிடும் வரியு நீராற்
புல்லிடும் வரியு முன்னோர் புகலசாத் தியமா மென்பர்

குவைவிரு புறத்துங் குத்தும் கூர்விழி புகைச்ச லுண்டாம்
அவைகப நீரால் வந்த திமிரமென் றறிந்து கொள்ளே. (அளஉ)

### 3 வாயுத்திமிரத்தின் குணம்

உந்தியில் வாய்வோ துங்கி லுச்சியிற் குத்த லுண்டாய்
முந்திய விழியு நோந்து மூடிய விருள்போ லாகும்
வந்தது விழியின் மீது வாயுவாந் திமிரமென்று
சுந்தர வதன மாதே தொகுத்துநீ யறிந்து கொள்ளே. (அளங)

### 4 மேகத்திமிரத்தின் குணம்

ஆக்கையிற் றாது கெட்டே யடர்ந்தரம் புகண்மே லிந்து
நோக்கிடும் விழியுஞ் சுற்றி நொய்மைசே ரொளிம ழுங்கி
வீக்கிடுங் கனன்மி குந்து விழியினி லெரிவுங் காணில்
தேக்கியன் மொழியாய் மேகத் திமிரமென் றுரைக்கலாமே. ()

## சிகிச்சை.

### 1 குழம்பு

ஆவின்பா லுரியிந்துப்புப் பலமதி னுள்ளே யிட்டு
மேவியே சுவறக் காய்ச்சி மேலிடு மருந்து கேண்மின்
தாவுவெண் கலத்தின் சார்வு தலையோடு துரிசு சங்கு
நீவிரைந் தொருக முஞ்சு நிகழ்த்துமா வெண்ணெய் கூட்டே. ()

கூட்டி யரைத்துப் பணவிடையாய்க் குறித்துப் பத்து நாளெழுத
ஆட்டுந் திமிரப் படல முத லனேக வியாதி தீருமெனக்
கேட்டுச் செய்ய முனியுரைத்த கிரியைப் படியே செய்வீரால்
நாட்டந் துலங்கு மெனவாயுள் வேத நவிலு முறைமையிதே. ()

### 2 தாப்பிராதிக் குளிகை

படிகம் பணில கிளிஞ்சில் தாம்பிரம் பஞ்சலோக மவற்றுடனே
கடிய கரிபல் லேனப்பல் கடலிற் சோகி நீற்றுக்கல்
அடவி லாமை யோட்டோடு சிரகயோ ரிதழின் வுலருடன்
திடமா முதலைப் பல்தேற்றுச் சிறுகி லரபில் வேர் காக்கணமே. ()

மேவுஞ் சீனக் காரமுடன் மிக்க மீத ரோகிணியும்
கூவுஞ் சாவ னைஞ்செலும்புங் குலவு பீங்கான் கட்டுரையும்

## சிகிச்சை

## அமுதாஞ்சனப்பொடி

சிந்திற் றண்டு கற்கடுக்காய் தேற்றுக் கொட்டை காக்கணம்வேர்
போந்த கொடுப்பை சிறுகீரை புகலோ ரிதழின் மூலமுடன்
ஆய்ந்தோ ரொன்று சமன்கூட்டி யரைநீ பழைய காடியினால்
வந்து மூலியாய் துரிசுதுத்த மினிய சீனக் காரமுமே. (௩௦௧)

மேவு மவின்சுண் ணம்புக்கன் மிக்க கிமிளை சோகிசங்கு
பாவு மருந்து முக்கழுஞ்சு பசர்சம் பீசப் பழச்சாற்றில்
தாவி யரைத்தே யடையாக்கித் தழலி லெரித்து நுணுக்கவதைக்
கோவித் தெழுந்த படர்த்தியினி லிடவே குணமாம்விழிதானே. ()

படர்த்தி முற்றிற்று.

---

## ௩ நெரிசல்—௩

## தசை, நீர், இரத்தம் என மூன்று

## சிகிச்சை. 1-தாரை.

துளியுந்து விரண மூன்றுஞ் சொல்லிய நெரிச லின்பேர்
மொழிவது மூன்று மாகு மொழிந்திடு மருந்து கேளாய்
தெளியு செய்யோ டிந்துப்புத் திரிகடு துரிசு துத்தம்
அளியுறு குழலாய் கூட்டி யழற்றியே தாரை வாரே. (௩௦௨)

## 2 பொடி

சீனக் கார முக்கழுஞ்சு செறியு மிந்துப் பரைக்கழுஞ்சு
பானற் றுரிசு காரகழுஞ்சு பகர்கர்ப்பூரம் பணவிடை கொள்
தேனேவெ துட்பிப்பொடிசெய்து தெரிவைமுலைப்பா றனிற்கலக்கி
மானே யழற்றி விழியொழுக்க வருத்து நெரிசன் மாய்ந்திடுமே. ()

நெரிசல் முற்றிற்று.

---

## ௪ புற்று—௩

அன்னதோர் தசையின் புற்று மரும்புநீர்ப் புற்றி னோடு
வன்னமா மணலின் புற்று வருத்திடு ரோகமூன் றில்
முன்னர்சொற் றசையின் புற்று முந்திடு நீரின் புற்றும்
அன்னவை சாத்தி யங்க ளனலொன்று மசாத்ய மாமே. (௩௦௪)

## ரு குமிழம்—௩

கொடியிடை மானே முன்னர்க் குறித்திடு குமிழ மூன்றும்
வடியுநீ ரோடி ரத்த மாங்கிஷ மிவையா மென்பர்
திடமுற வறிந்து கொண்ணீ நீருநீ ரிரத்த மற்றும்
இடர்செயு மாங்கி ஷந்தா னசாத தியமென்று தேரே. (௲கக)

## அவற்றின் குணம்

நாரியே நீரி னாலே நலிந்தெழு கொப்பு ளந்தான்
கூரிசங் கம்ப மும்போற் குமிழிக்கு மிரத்தத் தாலே
சேருமக் கொப்பு ளங்கேள் செங்குன்றி வடிவ மாகும்
பார்தசைக் கொப்பு ளந்தான் பணைத்தெழுங் கருமையாமே.

## சிகிச்சை

## குழம்பு

இந்துப்புத் துரிசு துத்த மெழுகட னுரையு மோணி
முந்துநற் சீனக் கார மொழியுமா வெண்ணெய் கூட்டி
நந்தினுற் கஞ்சத் திட்டு மைமத் தித்துக் கொண்டு
முந்துறு குமிழத் திட்டாற் றீர்ந்திடு மென்பர் முன்னோர். (௧)

குமிழம் முற்றிற்று.

---

## சு வரி—௩

அம்புய விழியின் முன்னே யறைந்திடு வரிகண் மூன்று
பப்புவெள் வரியி னோடு பகர்நீல வரியு மாகும்
வெம்பிய விரத்த மென்ன விளம்பினர் தமிழி னாலே
நப்பிநீ யறிவை நீல வரியசாத் தியமா மென்றே. (௲கச)

## அவற்றின் குணம்

விளம்புவெள் வரியின் செய்கை மீன்செது வெழுதல் போலாம்
விளங்கிழை மின்னே நீல வரியது துரிசு போலாம்
தளம்புறு மிரத்தத் தாலே சார்வரி சிவப்ப தாமென்
றுளங்கொணீ யிதற்குச் செய்யு மருந்தினி யுரைக்கலுற்றேன்.

## திரிபலையெண்ணெய்

திரிபலை வேங்கை காதல் செய்யகூ விளைவேர் சிந்தில்
மருவிலா மிச்சுச் சிற்ற மட்டிகன் னரி யோடே
தருவெட்டி *மிளகுதான்றி சாற்றிடு மகவ கந்தி
மருவுமிப் பன்னி ரண்டும் வகைக்குநாற் பலமாய்க் கூட்டே. ()

ஒக்கவே யிடித்து நாலு குறுணிநீ ருவத்து விட்டே
அக்கினி மூட்டி யெட்டொன் றய்வடித் தெண்ணெய் நாழி
தக்கபா லிளநீர் கையான் சதாவேரி கொடுப்பை சங்கு
மிக்கசம் பீர மற்றும் வெற்றிலை கொற்று னெல்லி. (௯௪௧)

இவையொன்று சாறு நாழி யெண்ணெயி னோடு கூட்டிச்
சுவையொன்று மதுரங் கோட்டஞ் சுக்கொடு தேவதாரம்
நவை பொன்று நாகம் பூவு நாகண மேல மாஞ்சில்
குவையொன்று சாதி பத்ரி குலவுசந் தனங்க ராம்பே. (௯௪௨)

கச்சோலங் கார்கோ லோடு கருதுவெட் பாலை வங்கம்
வைச்சோரோவ் வொன்று மூன்று கழஞ்சுகொண் மாசி லாதே
வெச்சென விடித்துத் தூவிப் பதத்திலே வெந்த வெண்ணெய்
இச்சையாய் முழுகு வோருக் கிமைத்தடிப் பேகுங் காணே. ()

இமைத் தடிப்பு முற்றிற்று

---

## ௩ இழிச்சற்கண்ணின் குணம்

கூரிய விமைவி ளிம்பு கொழுகொழுத் ததினீ ரோடி
ஊறிடும் புண்ணா தாக்கி யோடுவது மாறா தாகில்
பார்விழி திறக்கக் கூசும் பலபல விதனங் காட்டும்
தேருமிக் குணமி ழிச்சற் கண்ணிநா தீர்ந்தி டாதே. (௯௪௪)

### சிகிச்சை நவச்சாரக் களிம்பு

நவச்சாரங் துரிசிந் துப்புச் சமனாகக் கூட்டி நன்றாய்ச்
சுவைபெறு வெண்ணெய் கூட்டிச் சொல்லுவெண் கலத்திலிட்டே
அவையினைச் சங்கு தன்னா லரைத்துமத் திச்துக் கொண்டு
குவையுறு மிழிச்சற் கண்ணி லெழுதிடக் குணம தாமே. (௯௪௫)

இழிச்சற்கண் முற்றிற்று.

---

* மிளகுதான்றி யென்பது மிளகரணைபோலாம்.

### குணம்

சீருறு பர்ப ரோகக் குணங்கண்ணீர் மிகுதி யாகிச்
சோருமே யிமைக ரைத்துத் தோன்றிடு மிரத்தத் தாலே
சேருமவ் வுரோகச் செய்கை யிமையகஞ் சிவக்து செந்நீர்
வாருமாங் கிஷக்தா னுள்ளே தடித்தது வளருங் காணே. (௬௫௧)

### இரட்சை

பூருவத்தின் மைய மீது பொருந்திடும் பெருந ரம்பில்
மருவிய குடோரி யிட்டு வடியுநீ ரிரத்தம் போக்கில்
இரியுநீர்ப் பற்ப ரோக மிமைக்களப் பதுவு மாறும்
தெரிவைபி னிரத்த பற்பந் தீர்ந்திடுஞ் சிகிச்சை கேளே. (௬௫௨)

### சிகிச்சை

ஒள்ளிய விமைத டித்துக் கனத்தெழு முதிரந் தன்னில்
அள்ளிலே நெடுவேற் கண்ணு யமுதமாங் குடோரி யிட்டுக்
கொள்தசை யுரோகந் தன்னி லுப்பினுற் குழையத் தேய்த்தே
உள்ளுறுஞ் சதைநீர் போக்கி யிடுமருந் துரைப்பக் கேண்மின். ( )

### திரிபலாதி அஞ்சனப்பொடி.

திரிபலை கடிய காணந் தேறுமோ ரிதழின் மூலம்
கருவுறு முட்டைத் தோடு காட்டுசா ரடைவேர் சங்கு
மருவிய மடலின் றுத்தம் வருசிறு கீரை சிதை
பொரிபுறு சீனக் காரம் புகலு முங் கழஞ்சொவ் வொன்றே. ( )

இவையெலு மிச்சஞ் சாற்று லியல்புட னரைத்து லர்த்திக்
கவைபுறு சட்டி யிட்டுக் கனலெரி வெளுத்து தானல்
குவைபுறு சங்கா றறேய்த்துக் குறிபற்ப ரோகத் திட்டால்
நவையறத் தீரு மென்று நவின்றனர் முனிவ ரம்மா. (௬௫௫)

பற்பரோகம் முற்றிற்று.

---

சூ கழலை ௩

அசாத்தியம் ௧ சாத்தியம் ௨

இயம்பிய கழலை நீரா லிரத்தத்தாற் றசையி னாலே
வயங்கிமை மேலே மூந்து வளர்ந்திடு மூரோகங் கண்டால்

தயங்கிய விரத்தத் தாலே சார்ந்திடுங் கழலை நோரா
தியங்கிய தசையு நீருந் தீர்ந்திடு மியல்பிற் றாமே. (௬௫௬)

## சத்திரஞ்செய்ய

இமையுறு கழலை தீர்க்கு மியல்புகேள் கருவி யாலே
அமையநேர் பிளந்து தோன்று முளையினை யகற்றி யிட்டு
நமையுறு மிரத்தங் கண்டா னூட்டிய வெண்ணெய் நெய்யால்
சமையுறத் தாரை குத்தி வேதனை தணித்தி டாயே. (௬௫௭)

கழலை முற்றிற்று.

---

## எ நீர்ப்பாய்ச்சலின் குணம்

சிரமதிற் சேற்ப நின்று செறியுநீர் விழிக ரம்பில்
மருவியே கனப்பா யூர்ந்து மதர்த்துமேற் றிமிர்த்து விங்கும்
முருகவிழ் குழலி னாளே மொழியுமிக் குணங்கள் கண்டால்
தெரியுநீர்ப் பாய்ச்ச லென்று செப்பினார் கலைவல் லோரே. (௬௫௮)

## சிகிச்சை

## அசனவில்வாதித் தைலம்

வேங்கை வயிரம் வில்வம்வேர் மேவுஞ் சிந்தி னன்னாரி
பாங்கார் சிற்ற மட்டியின்வேர் பலமொவ் வொன்று மூன்றாக
வாங்கி யிடுநீர் பதக்கிலிட்டு வற்றக் காய்ச்சி யெட்டொன்றாய்
ஓங்கும் பச்சிலை கச்சோல முறுநல் லேல மதிமதுரம். (௬௫௯)

மதுரங் கோட்டங் கொத்தமல்லி வளர்கா கம்பூச் சதகுப்பை
இதமாங் குலக்காய் செவ்வள்ளி யிலவங் கத்தோல் வெந்தயமும்
கதமார் மிளகு சீரகமுங் கையான் சாறு தானூரியும்
முதுசம் பீரச் சாறுமுக்கு முறையா யெண்ணெய் கூட்டுகவே. ()

வைத்த தைலம் பதம்வந்தால் மருவ வடிக்கு நேரமதில்
சுத்த மிளகோர் பிடிபொடியாய்ச் சொல்லு மவின்காற் கழஞ்சிட்டு
நத்தி வடித்து வெந்நீரா னலமாய் முழுகி வரநிமையில்
உத்த நீரின் பாய்ச்சலுட னொழியு மண்டைச் சேற்பனமே. ()

---

## IV. கடைக்கண்ணில் நோய் ௧௫

தண்ணுறு கடையின் ரோஷங் கண்ணொடு படர்த்தி மூன்று
நண்ணுபூ சாந்தி ரத்தோ டிமைக்குரு நாடுங் கண்ணேக்
கண்ணுறு வாதம் வாயு கண்குவை மூன்று பின்னும்
எண்ணுவிற் புருதி சேருங் குமிழொடு பருவா மென்ப. (௬௬எ)

கண்ணொடு; நீர்ப்படர்த்தி, இரத்தப்படர்த்தி, தசைப் படர்த்தி எனப் படர்த்தி ௩., பூசாந்திரம், இமைக்குரு, கண்ணோ, கண்வாதம், கண்வாயு; நீர்க் குவை, இரத்தக் குவை, தசைக்குவை எனக் குவை ௩, விற்புருதி, குமிழொடு, விரணப் பரு எனக் கடைக்கண்ணில் நோய் ௧௫ வகைப்படும்.

### ௧ கண்ணொடு இது அசாத்தியம்

மூக்கடிக் கடையி னுள்ளே முளைத்தெழுங் குமிழ மாகத்
தாக்கியே சவ்வு மூடி வெடித்திடிற் சலமும் வீழும்
நோக்கியே நீரா தென்று நுவன்றிடு மாயுள் வேதம்
வீக்குவார் மூலையி னுளே கருவியால் விடுவித் தாற்றே. (௬௬அ)

### உ படர்த்தி ௩ இவை மூன்றும் சாத்தியம்

இளகிய கடையி னுள்ளே யிளகிநீர் தசையி ரத்தம்
அழலெனப் படரு மானே யசாத்திய மல்ல மூன்றும்
வழுவற விதற்கு முன்சொல் பொடிமருந் தவற்றூற் றீரும்
மழவிடை யுயர்த்தோன் சொன்ன வாகடத் தியல்பு தானே. ()

### 3 பூசாந்திரம் இது சாத்தியம்.

இளகிய பீளை நிற்கு மிடத்துக்கு மெள்ளின் மேலே
வளமுறு பருத்தி வித்துப் போலெழு மானே கேளாய்
உளைவுறு மொடுவும் பாயுஞ் சாத்திய முணர்ந்து கொண்ணீ
விளைவுறு கருவி யாலிவ் வேதனை தீர்த்தி டாயே. (௬எ0)

### 4 குவை ௩

சொல்லுநீர் தசையி ரத்தந் துன்றியே குன்றி போலக்
கல்லெனப் புடைத்தெ ழுந்து கடையிரண் டவற்றிற் றோன்றும்
முல்லைவெண் ணகையி னுளே கருவியான் முளையை நீவிப்
புல்லிடுந் துரிசான் முன்சொற் பொடியினை யெழுதப் போமே.()

மார்கழி தையி ரண்டா மாசிபங் குனிக்கு மூன்றும்
சீர்பெறு மேட ராசி சிறந்தவை காசி யைந்தாம்
ஆரவே யானி யாடி யாவணி கடிகை யாறும்
வாரிதி மெண்ணெய் தன்னை மாறவே கடிகை மூன்றே. ()

அறுபலங் கபம தாகு மாருத நால தென்க
உறுகய பித்தந் தானு மொருபல மென்று கொள்க
செறிமலர்க் குழலி னுளே செப்புவ னறியஞ் செய்தே
எறுதிரி தோஷந் தன்னை யிப்படி வாங்கிடாயே. (கூகூ0)

தோன்றிய தோஷ ராலிற் றொடர்ந்துகண் டீஷம் பண்ணி
என்றிடு மதின்மி குத்தே யிடருற நயன ரோகில்
சான்றவ ருரைத்த வண்ணந் தகுமுறை நசியம் மேவி
ஊன்றிய மருந்தை யிட்டே யுறுபுற வளையம் பூசே. (கூகூக)

பத்தியம்

குடிப்பது வெந்நீ ராகுங் கொள்ளுரசச் சாறு தானும்
பொடிப்புறு மிளகி னுதும் பொருந்தொரு போது கொள்க
தடிப்புள தயிரு மோருந் தாமிவை மிகவு மாகா
வெடிப்புள மீனி றைச்சி மேவவு மாகா தென்னே. (கூகூஉ)

சுக்கது நீரிற் காய்ந்து சுகப்பெறக் கொள்ள லாகும்
தொக்கறைக் கீரை யோடு திராய்வழு துணங்காய் நீக்கிப்
புக்கது சிறிய கீரை புனன்முளி முருங்கை காணி
தக்கது பயறு பாலுந் தாமிவை கறிகள் கொள்ளே. (கூகூங)

பங்க யக்கண் ணதுநொந்தாற் பருக்க வுறுத்தி நடவார்கள்
தங்கு மிரண்டை யடக்கார்கள் சாரும் மாங்காய்க் கறிகொள்ளார்
அங்கை யில்வெற் றிலையேந்தா ரருகி ருந்தா ருடன்பேசார்
மங்கை தருமின் பினின்மருவார் மருந்து முட்கொள் வதும்பாலே.

கபாலநீரினுற் கண்மறைதல்

அன்ன மிருந்த படியாலு மரிவை முயக்கந் தன்னாலும்
மன்னுந் தண்ணீர் மிகக்குடித்து வருவ தாலு நடையாலும்
பொன்னின்மறைத்தகாளிதம்போற்புருவகிலையைப்புகார்மறைக்கும்
கன்ன வடியிற் பெருகாய்பு கபால முறைந்தாற் கண்மறையும். ()

